# ஆண்டின் பொதுக்காலத்தின் பத்தொன்பதாம் ஞாயிறு

## மூன்றாவது திருவழிபாடு ஆண்டு

**இன்றைய வாசகங்கள்:**

**1சாஞா 18: 6-9, எபி 11:1-2, 8-19, லூக்கா 12: 32-48**

## திருப்பலி முன்னுரை:

பொறுப்புக்குரியவர்களே, பொதுக்காலத்தின் பத்தொன்பதாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்களை அன்போடு வரவேற்கிறோம். தலைவர் வந்து பார்க்கும்போது, விழித்திருக்கும் பொறுப்புள்ள பணியாளர்களாக வாழ இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. ஆண்டவரின் வருகையை எப்போதும் எதிர்நோக்கி காத்திருக்க நாம் அழைக்கப்படுகிறோம். ஆண்டவர் வர காலம் தாழ்த்துவார் என கூறிக்கொண்டு, தீய நாட்டங்களுக்கும், செயல்களுக்கும் இடம் கொடுத்தால் நாம் கொடுமையான தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவோம் என இயேசு எச்சரிக்கை விடுக்கிறார். நம் தலைவராகிய இயேசுவுக்கு உண்மை உள்ளவர்களாக வாழும்போது, நம்மை அவர் தம் உடமைக்கெல்லாம் அதிகாரியாக அமர்த்துவார் என்ற வாக்குறுதி அளிக்கப்படுகிறது. எனவே கடவுளின் திருவுளத்தை உணர்ந்து, அவரது விருப்பத்தை நிறைவேற்றும் பொறுப்புள்ள பணியாளர்களாக செயல்பட வரம் வேண்டி, இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. எங்கள் தலைவரே இறைவா,**

எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், உமக்கு உண்மை யுள்ள பணியாளர்களாய் வாழவும், திருச்சபையின் மக்கள் உமது திருவுளப்படி வழிநடத்த வும் அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**2. எங்கள் வாழ்வே இறைவா,**

உலகெங்கும் வாழும் மக்கள் அனைவரும் பணத்துக்கும், பதவிக்கும் சேவை செய்வதை விடுத்து, எங்களுக்கு வாழ்வளிக்கும் உண்மை தலைவரான உமக்கே பணி செய்து வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**3. எங்கள் நிறைவே இறைவா,**

உண்மையின் நிறைவான உம்மை அறிந்துகொள்ளாமல், மூடநம்பிக்கைகளில் மூழ்கித் திழைக்கும் எம் நாட்டு மக்கள் அனைவரும் உம் திருமகன் வழியாக நீர் அளித்த மீட்பைத் தேடி அடைய உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**4. எங்கள் உறவே இறைவா,**

தவறான புரிதல்களாலும், விட்டுக்கொடுக்கும் மனம் இல்லாததாலும் ஒருவரையொரு வர் பகைத்து வாழ்பவர்கள், மீண்டும் தங்கள் உறவைப் புதுப்பித்துக்கொண்டு புதுவாழ்வு வாழ துணைநிற்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**5. தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல் எம்மைத் தேற்றும் தந்தையே இறைவா!**

பல்வேறுவிதமான நோய்களாலும் தாக்கப்பட்டு வேதனையுறுவோர் அனைவர்மீதும் மனமிரங்கி அவர்களுக்கு வேண்டிய நற்சுகத்தை அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.